# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

| | | |
|---|---|---|
| பிரிவு | : | TNPSC Group II தேர்வு |
| பாடம் | : | இந்திய தேசிய இயக்கம் |
| பகுதி | : | **இனவாதத்திற்கு வழிவகுக்கும் பகிர்வுகள்** |

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப்-2 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள்வடிவில்தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக்குறிப்புகளுக்கானகாப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# இந்தியா - பாகிஸ்தான் பிரிவினை

**இந்திய விடுதலைச் சட்டம் (1947):**

- மௌண்ட் பேட்டன் திட்டத்தை ஏற்றுக்கொண்ட **பிரிட்டிஷ் அரசாங்கம் 1947 ஜூலை 18-ம் நாள் இந்திய விடுதலைச் சட்டத்தை நிறைவேற்றியது.**

**இச்சட்டத்தின் முக்கிய கூறுகள்:**

**இந்தியா - பாகிஸ்தான் பிரிவினை**

- இந்தியா - பாகிஸ்தான் பிரிவினை 1947 ஆகஸ்டு 15 முதல் நடைமுறைக்கு வரும். பிரிட்டிஷ் அரசாங்கம் அனைத்து அதிகாரங்களையும் இவ்விரண்டு நாடுகளிடம் வழங்கும்.
- பஞ்சாப், வங்காளம் இவ்விரண்டு மாகாணங்களின் எல்லைகளை வரையறுப்பதற்கு எல்லை வரையறுக்கும் ஆணையம் ஏற்படுத்தப்படும்.
- இவ்விரண்டு நாடுகளின் அரசியலமைப்பு குழுக்களுக்கு அரசியலமைப்பை உருவாக்கும் அதிகாரங்கள் வழங்கப்படும்.
- ராட்கிளிப் தலைமையிலான எல்லை வரையறுக்கும் ஆணையம் இந்திய - பாகிஸ்தான் எல்லைகளை வரையறுத்தது. 1947 ஆகஸ்டு 15-ம் நாள் இந்தியாவும், ஆகஸ்டு 14-ம் நாள் பாகிஸ்தானும் சுதந்திர நாடுகளாயின. சுதந்திர இந்தியாவின் முதல் தலைமை ஆளுநராக மௌண்ட்பேட்டன் பிரபு பொறுப்பு ஏற்றார் பாகிஸ்தானின் முதல் தலைமை ஆளுநராக முகமது அலி ஜின்னா பதவியேற்றார். 1948 ஜனவரி 30-ம் நாள் மிகவும் சோகமான நிகழ்ச்சியும் நடந்தேறியது. தேசத் தந்தை மகாத்மா காந்தியை புதுடெல்லியில் வைத்து அவர் வழிபாட்டுக் கூட்டத்துக்குச் செல்லும் வழியில் நாதுராம் கோட்சே சுட்டுக்கொன்றார்.